# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 06 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 10

## திருக்குற்றாலக் குறவஞ்சி

1. குற்றாலகுறவஞ்சி தோற்றம் பெற்ற காலம் யாது? அதை இயற்றியவர் யார்?

2. **“ வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்...”**
அ. இங்கு வான்கவிகள் எனப்படுவோர்?
ஆ. வானரம்,எனபதன் பொருள்? மந்தி என்பது என்ன?
இ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?

3. **“ கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்**
**கவன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்... ”**
அ. இதில் கானவர்கள் எனப்படுவோர்?
ஆ. வானவர் என்பதன் கருத்து யாது?
இ. காயசித்தி என்பதன் மூலம் கருதப்படுவது?

4 **“ கூனிலிளம் பிறை முடித்த வேணியலங்காரர்**
**குற்றால திரிகூட மலையெங்கள் மலையே... ”**
அ. இவ்வடிகளில் கூனிலிளம் பிறை என்பதன் பொருள்?
ஆ. இங்கு வேணியலங்காரர் எனக் கருதப்படுபவர் யார்?

5 “ **கிம்புரியின் கொம்பொடித்து**
**வெம்பு திணை இடிப்போம்... ”**
அ. இதில் கிம்புரியின் கொம்பு எனக்கருதப்படுவது யாது?
ஆ. இச்செயலை செய்பவர்கள் யார்?

6. **“ சூழுமேதி இறங்கும் துறையில் சொரியும் பாலை……”**
அ. இங்கு மேதி என்பதால் நீர் விளங்கிக் கொள்வது?
ஆ. துறை எனக்கருதப்படுவது யாது?

7. “**மாதம் மூன்று மழை உள்ள நாடு**
**வருடம் மூன்று விளைவு உள்ள நாடு..**
அ. இங்கு குறிப்பிடப்படும் நாடு எது?
ஆ. விளைவு என்பது எதனை குறிக்கின்றது.

8 **“ வேத மூன்றும் பலாவுள்ள நாடு**
**விஷேச மூன்றும் குலாவுள்ள நாடு... ”**
அ. வேதம் மூன்றும் எனப்படுபவை எவை? □
ஆ. இங்கு விஷேசம் எனக் கருதப்படுபவை?

9 **“ போதம் மூன்றும் நலஞ் செய்யும் நாடு**
**புவனம் மூன்று வலஞ் செய்யும் நாடு... ”**
அ. இங்கு போதம் மூன்று எனப்படுபவை எவை?
ஆ. இவ்வடிகளில் புவனம் என்பதன் பொருள் யாது?

10. **“ நாத மூன்றுருவான குற்றால நாதர்**
**ஆரிய நாடு எங்கள் நாடே.. ”**
அ. இவ்வடியில் நாத மூன்றுரு எனப்படுவோர்?
ஆ. இங்கு நாத மூன்றுருவானவர் யார்?

11 **“ நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்**
**நெருங்கக் காண்பது கன்னலின் செந்நெல்... ”**
அ. இங்கு நீங்கக் காண்பது எது?
ஆ. கன்னல் என்பதன் பொருள் யாது?

12 திருக்குற்றாலக் குறவஞ்சியின் பாட்டுடை தலைவன், தலைவி யாவர்?

13 குறவஞ்சி என்பதன் பொருள் யாது?

14 பெண்களின் 7 பருவங்களும் எவை?

15. திருக்குற்றால மலை வளம் பற்றி எடுத்துரைக்குக.?

16. திருக்குற்றால நாட்டுவளம் பற்றி தெளிவுறுத்துக?

17 திருக்குற்றால நாதர் பெருமைகள் வெளிப்படும் தன்மையினை தெளிவுறுத்துக?

18. ஆசிரியரின் கவிச்சிறப்புக்கள் / மொழிநடைச் சிறப்புக்கள் யாவை?

19. இப்பாடல்களினூடு வெளிப்படும் அணிச்சிறப்பினை எடுத்துக்காட்டுக.

20 நீர்வளம் எவ்வாறு எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.